# கூசு தீவு மலையில் தீ எரிவதை முதலில் பார்த்து காவல்துறையை அழைத்தார் ஹரிஹரன்

கூசு தீவின் மலைமீது நேற்று முன்தினம் மாலை பற்றி எரிந்த தீயில் அங்கு இருந்த கிராமாட் நினைவிடம் என்றழைக்கப்படும் மூன்று மலாய் வழிபாட்டுக்கூடங்கள் கடு மையாகச் சேதமடைந்தன.

தீச்சம்பவத்தை அங்கு பணியில் இருந்த துப்புரவாளர் ஒருவர் முதன் முதலாகக் கண்டதாக நேற்று தெரிவிக்கப்பட்டது.

மாலை 6.20 மணியளவில் பற்றி எரிந்ததை அவர் கண்டாகக் கூறப்படுகிறது. தீப்பற்றியதற்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

சேதமடைந்த வழிபாட்டுக்கூடங்கள் மீண்டும் கட்டி எழுப்பப்படும் என்று அதன் பராமரிப்பாளரான திரு இஷாக் சம்சுதின், 60, தெரிவித்தார்.

தீச்சம்பவம் குறித்து தாம் அதிர்ச்சி அடைந்ததாகவும் வழிபாட்டுக் கூடங்கள் அழிந்ததை நம்பக் கடினமாக இருந்தது என்றும் அவர் கூறினார். வழிபாட்டின் போது பயன்படுத்தப்படும் ஊதுவத்தி களால் தீப்பிடித்திருக்க வாய்ப்பு இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

கூசு தீவில் மூன்றாண்டுகளாக துப்புரவு வேலை செய்து வரும் ஹரிஹரன், 26, என்பவர் 'ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்' செய்தியாளரிடம் பேசினார்.

மாலை நேரத்தில் கருகிய வாடையை தாம் உணர்ந்ததாகவும் அதனைத் தொடர்ந்து வழிபாட்டுக் கூடங்களை நோக்கி ஓடியபோது அவை தீப்பற்றி எரிந்துகொண்டதாகவும் அவர் கூறினார். பின்னர் இதுபற்றி காவல்துறையிடமும் திரு இஷாக்கிடமும் தெரிவித்ததாகவும் ஹரிஹரன் சொன்னார்.

இரவு நேரம் நெருங்கிய அந்த வேளையில் விரைந்து வந்த சிங்கப்பூர்க் குடிமைத் தற்காப்புப் படையினர் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டனர்.

கடுமையாக பெய்த மழை அவர்களின் முயற்சிக்கு ஒத்துழைத்தது. தீயணைப்பு முயற்சிக்கு கடல் நீரைப் பயன்படுத்த சுமார் 20 தண்ணீர்க் குழாய்களை அவர்கள் பயன்படுத்தினர்.

அந்தக் குழாய் ஒவ்வொன்றும் 30 மீட்டர் நீளமுள்ளதாக இருந்த தென ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் கூறியது.

அதன் செய்தியாளர் நேற்றுக் காலை அங்கு சென்று பார்த்தபோது சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையின் இரு படகுகள் தீவின் படகுத்துறைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார்.

பிற்பகல் 12.30 மணியளவில் விசாரணை அதிகாரிகள் 152 படிகளைக் கொண்ட மலைமீது ஏறி வழிபாட்டுக் கூடங்களுக்குச் சென்றனர். தீப்பிடித்த பகுதி சுற்றி மறைக்கப்பட்டு இருந்தது.

தீப்பிடித்த வேளையில் வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும் கூறப்படுகிறது.



ஞாயிறு மாலை கூசு தீவு மலையில் மளமளவென பற்றி எரிந்த தீயில் சேமடைந்த வழிபாட்டுக்கூடம். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

# புதுப்பொலிவு பெற்ற மறுவாழ்வு நிலையத்தில் நவீன வசதிகள்

டான் டோக் செங் மருத்துவமனையில் புதுப்பிக்கப்பட்டுள்ள மறுவாழ்வு நிலையம், அதிகரித்து வரும் மருத்துவ தேவைகளைச் சமாளிக்க கைகொடுக்கும்.

குறிப்பாக, சிங்கப்பூரின் மூப்படையும் மக்கள்தொகை மற்றும் உடற்குறைப் பிரச்சினைகளைக் கையாள இது உதவும்.

ஏறக்குறை 20,000 சதுர அடி பரப்பளவில் புதுப்பிக்கப்பட்டுள்ள நவீன மறுவாழ்வு சிகிச்சை மருந்தகம் இதற்கு முன்னர் இருந்த அளவைக் காட்டிலும் நான்கு மடங்கு பெரியது.

வழக்கமான சிகிச்சைக் கருவிகளுடன் இயந்திர மனிதனும் இதில் பயன்படுத்தப்படும். குணமடையும் நோயாளிகளுக்கு இது பெரிதும் உதவும்.

பெரிய அளவில் உருவாகி உள்ள இந்தப் புதிய நிலையத்திற்கு ஆண்டுக்கு 13,000 நோயாளிகள் வரை வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

2020ஆம் ஆண்டு, புதுப்பித்தலுக்கு முன்னர் 5,400 நோயாளிகளும் 2019ஆம் ஆண்டு 8,000 நோயாளிகளும் இங்கு வந்தனர்.

சிங்கப்பூரின் மூப்படையும் மக்கள் தொகையைச் சமாளிக்க இது போன்ற மறுவாழ்வு நிலையங் களுக்கான தேவை அதிகரித்துள்ளதாக டான் டோக் செங் மருத்துவமனையின் மறுவாழ்வு மருந்துத் துறை தலைவர் டாக்டர் லோ யோங் ஜூ கூறினார்.

“மூப்படையும் மக்களுடன் உடற்குறை உள்ளோரும் அதிகரிப்பதால் அவர்கள் எல்லாருக்குமான மறுவாழ்வு வசதி தருவதில் சிரமம் இருந்தது. அதனால் வீட்டிலேயே தங்கவேண்டிய பலருக்கும் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன.

“இப்போது பெரிய அளவில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் இனி அவர்களுக்கும் சேவை அளிக்க முடியும்,” என்று அவர் தெரிவித்தார்.

பக்கவாதம், மூளை பாதிப்பு மற்றும் முதுகுத்தண்டு காயங்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை நிலையம் கையாள்கிறது.

புதிய நிலைய தொடக்க நிகழ்வில் பேசிய சுகாதார அமைச்சர் ஓங் யி காங், அரசாங்கத்தின் அதிநவீனத் தொழில்நுட்பத்திற்கு இணையாக கடப்பாடு கொண்ட மனிதவளம் மற்றும் சமூக ஆதரவு போன்றவற்றின் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.



முதுகுத்தண்டு பாதிக்கப்பட்ட ரினேஷ் ராதாகிருஷ்ணன், 17, மறுவாழ்வு நிலையத்தின் நவீன கருவிகளின் துணையோடு நடப்பதை சுகாதார அமைச்சர் ஓங் யி காங் பார்வையிட்டார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

# கடல்நீர்மட்ட உயர்வை கண்காணிக்க ‘டுரோன்’

கடல்நீர்மட்ட உயர்வைச் சமாளிக்க சிங்கப்பூர் ஒரு கட்டத்தில் ஆளில்லா வானூர்தியையும் (டுரோன்) கண்காணிப்புக் கருவிகளையும் பயன்படுத்த வேண்டி வரலாம் என்று நீடித்த நிலைத்தன்மை, சுற்றுப்புற அமைச்சர் கிரேஸ் ஃபூ தெரிவித்துள்ளார்.

கடல்நீர்மட்ட பிரச்சினையைச் சமாளிக்க சிங்கப்பூர் எடுத்து வரும் முயற்சிகளில் இவையும் அடங்கும் என்றார் அவர். இது தொடர்பாக பொதுப் பயனீட்டுக் கழகம் யோசனைகளுக்கு அழைப்பு விடுக்கும் என்று அவர் கூறினார்.

சிங்கப்பூரின் அனைத்துலக தண்ணீர் வாரம் மற்றும் ‘கிளீன் என்வைரோ’ என்னும் இருவித சுற்றுச்சூழல் மாநாடுகளை தொடங்கி வைத்து அவர் உரை நிகழ்த்தினார்.

சிங்கப்பூரின் கடலோரத்திலும் உட்புறத்திலும் நிகழக்கூடிய வெள்ளம் தொடர்பான தரவுகள் மீது பகுப்பாய்வு நடத்தி விவரங்களைச் சேகரிப்பது, விண்வெளிப் படங்கள் மற்றும் ரேடார் கண்காணிப்பு போன்ற வளர்ந்துவரும் உணர் கருவித் தொழில்நுட்பத்தின் பயன்பாடு ஆகியன தொடர்பாக கழகம் யோசனைகளை வரவேற்கும் என்று அப்போது அவர் கூறினார்.

“இந்த யோசனைகள் வலுவான கடலோரப் பாதுகாப்பு உத்திகளை வகுப்பதில் கழகத்திற்கு உதவும்,” என்றும் திருவாட்டி ஃபூ குறிப்பிட்டார்.

அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு இணங்க பொதுப் பயனீட்டுக் கழகம் நேற்று ஓர் அறிக்கையை வெளியிட்டது. மூன்று அம்சங்களில் யோசனைகளை வரவேற்பதாக அதில் அது தெரிவித்தது.

முதலாவது, குறைந்த பராமரிப்பு ரேடார் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளியை அடிப்படையாகக் கொண்ட, இணையத்தின் துணையுடன் உடனுக்குடன் தரவுகளை வழங்கக்கூடிய உணர்கருவிகள் ஆகியன தொடர்பானது. சிங்கப்பூரின் கடலோரப் பகுதிகளில் கடல்நீரின் உயர்வு வேறுபடுவதைக் காட்ட இவற்றின் தரவுகள் உதவும்.

நீண்டகால அடிப்படையில் நிகழும் மாற்றங் களைக் கண்காணிக்கவும் கழகத் திற்கு இவை பயன்படும் என்று கழகத்தின் கடலோரப் பாதுகாப்புத் துறை துணை இயக்குநர் ஹோ சாய் டெக், ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் செய்தித்தாளிடம் கூறினார்.

கடற்கரை அருகே கடல்நீர் மட்டம் உயர்வதால் கப்பல்கள் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைக் கண்காணிப்பது இரண்டாவது அம்சம். கடலோரத்தை கப்பல் நெருங்கும்போது ஆழமற்ற நீரில் எழும் அலைகள் கடல்நீர்மட்ட உயர்வின் தாக்கத்தை மோசமாக்கக்கூடும்.

கடலோரத்திலும் நாட்டின் உட்புறத்திலும் ஏற்படும் வெள்ளத்தின் ஆழத்தையும் அளவையும் கண்காணிக்க ஆளில்லா வானூர்தி, கண்காணிப்புக் கருவி, குடிமக்கள் வழங்கும் விவேகக் கைபேசி படங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கான சாத்தியம் தொடர்பானது மூன்றாவது அம்சம் என்று கழகம் கூறியது.

## பிரிட்டன்வாசிக்கு சிறை, அபராதம் விதிக்கக் கோரிக்கை

கொள்ளைநோய் பரவிய காலத்தில் பொது இடங்களில் மீண்டும் மீண்டும் முகக்கவசத்தை சரிவர அணியாத பிரிட்டிஷ் ஆடவருக்கு ஒரு வார சிறைத் தண்டனையுடம் $5,000 அபராதமும் விதிக்குமாறு அரசுத்தரப்பு கேட்டுக்கொண்டுள்ளது. ஃபிலிப் ரிச்சர்ட் மொக்ரிட்ஜ், 55, எனப்படும் அவர், தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நேற்று ஒப்புக்கொள்வதாக இருந்தார். ஆனால், அரசுத்தரப்பு கோரிய தண்டனை மிகவும் கடினமானது என அவர் கூறியதைத் தொடர்ந்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## சிறுவனைத் தாக்கிய தந்தை, மகனுக்கு சிறை

13 வயதுப் பையனை தாக்கிய குற்றத்திற்காக ஓங் எங் செங், 62, என்பவருக்கும் அவரது மகனான பெர்னார்ட் ஓங் வெய் ஃபெங், 31, என்பவருக்கும் தலா மூன்று வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதோடு இழப்பீடாக $60 வழங்கவும் உத்தரவிடப்பட்டது. 2019 டிசம்பர் 22 மாலையில் தோ பாயோ பலநோக்கு மண்டபத்தில் சிறுவன் தமது மூன்று நண்பர்களுடன் பந்து விளையாடியபோது நடந்து சென்ற முதியவரான ஓங் அருகில் பந்து விழுந்ததைத் தொடர்ந்து ஓங் சினமுற்றார். மகனை அழைத்து வந்து இருவரும் சிறுவனைத் தாக்கினர். சிறுவனின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

## பீச் ரோடு தாக்குதலை நிறுத்த உதவியோருக்கு விருது

பீச் ரோட்டில் கடந்த வியாழக் கிழமை ஆடவர் ஒருவர் தமது மனைவியை வெட்டுக்கத்தியால் தாக்கியபோது அந்தக் கொடூரச் சம்பவத்தைத் தடுக்க உதவியதற்காக ஒன்பது ஆடவர்களை காவல் துறை பாராட்டி விருது வழங்கியுள்ளது.

அன்று மாலை ஸோங் ஹுவா ஸ்டீம்போட் உணவகம் அருகே தமது மனைவியை அந்த ஆடவர் சரமாரியாக வெட்டினார். அதனைத் தொடர்ந்து அந்தப் பெண் ரத்தம் சொட்டச் சொட்ட கீழே விழுந்தபடி உதவி கேட்டு அலறினார். ஒன்பது ஆடவர்களில் ஒருவரான திரு வெய் சென் சியாங், 32, அச்சம்பவத்தை நினைவுகூர்ந்தார்.

“என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள். என் கை போய் விட்டது,” என்ற அலறல் சத்தத்தைத் தாம் கேட்டதாக ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் செய்தித்தாளிடம் நேற்று அவர் கூறினார்.

ஸோங் ஹுவா ஸ்டீம்போட் உணவகத்தின் சமையலறையில் பணியாற்றிய அவர், பெண்ணின் கூக்குரலைக் கேட்டு அவரைத் தாக்கிக்கொண்டிருந்த கணவன் மீது நாற்காலியை வீசினார். இதர எட்டுப் பேரும் கையில் கிடைத்த பொருள்களை அந்த ஆடவர் மீது வீசினர். அருகிலிருந்த உணவகங்கள் மற்றும் குத்தகை நிறுவனப் பணியாளர்கள் அவர்கள். பொருள்கள் அடுத்தடுத்து வீசப்பட்டதைத் தொடர்ந்து ஆடவர் அங்கிருந்து ஓடிவிட்டார்.

பின்னர் மாலை 5.30 மணியளவில் காவல்துறையினர் வரும் வரை அந்தப் பெண்ணைச் சுற்றி பாதுகாத்து அவர்கள் நின்றனர். தாக்கப்பட்ட ஹான் ஹோங்லி, 41, என்ற அந்தப் பெண் காயமுற்ற தமது கையைத் தாங்கிப் பிடித்தவாறு இருந்தார். டேசர் கருவியைப் பயன்படுத்தி ஆடவரை காவல்துறையினர் பிடித்தனர். சம்பவம் குறித்து காவல்துறையை அழைத்த பலரில் ஒருவரான திருவாட்டி டோ லீ குவீ என்பவரையும் நேற்று காவல்துறையினர் பாராட்டினர்.

“பெண்ணின் காயத்தைக் கண்டதும் பயந்துவிட்டேன். ஆனாலும் அந்த நேரத்தில் யோசிக்க நேரமில்லை. மீண்டும் அப்பெண்ணை அவரது கணவர் நெருங்கிவிடாதவாறு நாங்கள் பார்த்துக்கொண்டோம்,” என்று மாண்டரின் மொழியில் திரு வெய் கூறினார்.

திருவாட்டி டோ உள்பட 10 பேருக்கும் பொதுநல ஊக்க உணர்வு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வு மத்திய காவல்துறை பிரிவு அலுவலகத்தில் நேற்று நிகழ்ந்தது.

கைது செய்யப்பட்ட செங் குயோ யுவான், 46, மீது கொலைமுயற்சி குற்றம் சுமத்தப்பட்டது. இவரும் இவரது மனைவியும் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக அறியப்படுகிறது.

## போலி ஆவணங்கள் மூலம் $2.67 மி. வங்கிக் கடன் பெற்று மோசடி; நிறுவன இயக்குநருக்கு 30 மாத சிறைத் தண்டனை

நிறுவனம் ஒன்றிடம் இருந்து காய்கறிகளை வாங்கியதாக போலி ஆவணங்கள் தயரித்து $2.67 மில்லியன் வர்த்தகக் கடன் பெற்று மோசடி செய்த குற்றத்திற்காக மற்றொரு நிறுவன இயக்குநருக்கு நேற்று நீதிமன்றத்தில் 30 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

டே கிம் யோங், 52, எனப்படும் அவர் கடந்த 2019ஆம் ஆண்டு இரு காய்கறி விற்பனை நிறுவனங்களை நடத்தி வரும் டான் டெக் தியாங், 54, என்பவரை அணுகி அவரது நிறுவனத்தில் காய்கறிகள் வாங்கியதாக ஆவணங்களைத் தயாரித்துத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

வர்த்தகப் பங்காளி என்பதால் டேயின் கோரிக்கையை டான் ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப போலி ஆவணங்களை வழங்கினார்.

பொருள்கள் வாங்கியதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கும் தொகைக்கு நிகராக டே வங்கியின் கடன் கேட்டு விண்ணப்பிப்பார். டானின் வர்த்தகக் கணக்கில் வங்கி அந்தத் தொகையை வரவு வைக்கும். பின்னர் அந்தத் தொகை டேயின் நிறுவனக் கணக்கிற்கு மாற்றப்படும். வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியது டேயின் பொறுப்பு.

இவ்வாறு 23 போலி ஆவணங்களை டானின் நிறுவனம் தயாரித்தது. அவற்றின் அடிப்படையில் ஓசிபிசி வங்கி $1.46 மில்லியன், யுஓபி வங்கி $727,735.57, மே பேங்க் $484,000 கடன்களை வழங்கின. அவற்றில் குறிப்பிடத்தக்க அளவு தொகை திருப்பிச் செலுத்தப்பட்டு உள்ளது.

2020 ஜனவரி 13ஆம் தேதி டேயின் நிறுவனத்தில் பணியாற்றிய அதிகாரி ஒருவர் இந்த மோசடி குறித்து காவல்துறையிடம் புகார் அளித்ததைத் தொடர்ந்து அது வெளிச்சத்திற்கு வந்தது.

டே தம்மீது சுமத்தப்பட்ட ஏழு குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டார். இதர 16 குற்றச்சாட்டுகளை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொண்டது. மோசடிக்கு ஒத்துழைத்த டான் குறித்து நீதிமன்ற ஆவணங்கள் எதனையும் குறிப்பிடவில்லை.

### செய்திக்கொத்து

## இரவுநேர பொழுதுபோக்குக் கூடங்கள் இன்றுமுதல் திறப்பு

இரவுநேர பொழுதுபோக்குக் கூடங்கள் இன்று செவ்வாய்க் கிழமைமுதல் திறக்க அனுமதிக்கப்பட்டாலும் சில பொழுதுபோக்குக் கூடங்களிடம் அதிக ஆர்வம் காணப்படவில்லை. இது தொடர்பாக சில இரவுநேர பொழுதுபோக்குக் கூட நடத்துநர்கள் சிலருடன் ‘ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்’ செய்தியாளர் பேசினார். இன்று திறக்க அனுமதிக்கப்பட்டாலும் சில பொழுதுபோக்குக் கூடங்கள் நாளை புதன்கிழமை திறப்பதாகக் கூறின. சில கூடங்கள் இப்போதைக்கு நடனத்தை நிறுத்திவைத்து வர்த்தகத்தை மீண்டும் தொடங்க உள்ளன.

இரவுநேர மதுபானக் கூடம், இசைக் கூடம், கரவோக்கே நிலையம், டிஸ்கோ நடனக் கூடம் போன்றவற்றிற்கு கொவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகள் தொடருகின்றன. பாதுகாப்பு நிர்வாக நடைமுறைகளை அவை பின்பற்ற வேண்டும். குறிப்பாக, தடுப்பூசி போட்டுக் கொண்டோர் அடிப்படையிலான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயம். ஆடல், பாடலுடன் கூடிய உள்ளரங்க நிகழ்வுகளைக் காணச் செல்வோர் முகக்கவசம் அணிவதும் கட்டாயம். சாப்பிடும்போதும் பானம் அருந்தும்போதும் மட்டுமே அவர்கள் முகக் கவசத்தை அகற்ற வேண்டும். அவற்றைச் செய்து முடித்த உடன் மீண்டும் முகக்கவசத்தை அணிந்துகொள்ள வேண்டும். கொவிட்-19 கிருமித்தொற்று பரவல் மிகுந்திருந்த வேளையில் இரவுநேர பொழுதுபோக்குக் கூடங்கள் பல உணவு, பானங்களை விற்கும் கடைகளாக மாறி செயல்பட்டன.

## $62,000 போலி ஆடைகள்

கிளமெண்டியில் உள்ள தெருச்சந்தையிலும் அங் மோ கியோ ஸ்திரீட் 51ல் உள்ள வீடு ஒன்றிலும் காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையில் $62,000 மதிப்புள்ள போலி வணிகமுத்திரை கொண்ட ஆடைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 42 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காவல் துறை நேற்று தனது அறிக்கையில் தெரிவித்தது. போலி முத்திரை பதிக்கப்பட்ட 2,400 ஆடைகள் கைப்பற்றப்பட்டன. குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஐந்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் $100,000 வரையிலான அபராதமும் விதிக்கப்படலாம்.